

திருச்சியில் மறைந்த தொழிலதிபர் ராமஜெயம் அவர்களின் 64 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கேர் கல்லூரியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் காடுவெட்டி தியாகராஜன், ஸ்டாலின் குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், கழக நிர்வாகிகள் துரைராஜ், கருப்பையா, முத்துச்செல்வம், விஜயா, ஜெயராஜ், சுப்பிரமணி, குடமுருட்டி சேகர், ஆனந்த், தொ.மு.ச. குணசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# தி.மு.க. மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!

### பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தி.மு.க. மக்களவை -மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், இன்று (23.09.2025 – செவ்வாய்க்கிழமை), காலை 10.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் நடைபெறும்.

அதுபோது, தி.மு.க. மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18.
நாள் : 21.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தேர்தலில் சீட் கொடுப்பது குறித்தும் அவர்தான் முடிவு செய்வார்!

# தமிழ்நாட்டில் இருப்பது அமித்ஷா அ.தி.மு.க.!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விமர்சனம்!

திருப்பூர், செப். 23 -

தமிழ்நாட்டில் இருப்பது அ.தி.மு.க. கிடையாது. அமித்ஷா அ.தி.மு.க. என்றும், வருகிற சட்டமன்ற தேர்தலில் யாருக்கு சீட் கொடுப்பது என்பது குறித்தும் அமித்ஷா தான் முடிவு செய்வார் என தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறினார்.

திருப்பூர் வடக்கு மாநகர தி.மு.க. அலுவலகம் திறப்பு விழா திருப்பூர் போயம் பாளையம் பகுதியில் நடைபெற்றது.

இதனை தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரம் செய்யும் பகுதிகளில் மின்சாரம் நிறுத்துவதாக பொய்யான குற்றச்சாட்டுகளை பதிவு செய்து வருகின்றனர். கரூரில்



நடந்த முப்பெரும் விழா மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளது. மாநாட்டு பந்தலில் 1.50 லட்சம் தொண்டர்கள் இருந்தார்கள் வெளியிலேயே 2 லட்சம்பேர் காத்திருந்தார்கள். இதை நாங்கள் சொல்லவில்லை. அனைத்து ஊடகங்களும் கூறியதுதான். தி.மு.க. கொள்கை கூட்டம், மற்றவர்களுக்கு வருவது காக்கா கூட்டம்.

**2026 தேர்தலில் தி.மு.க. சாதனை படைக்கும்!**

2026 சட்டமன்ற தேர்தலை பொறுத்தவரை ஒரு கோடி வீடுகளைச் சென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் சந்தித்துள்ளார்கள். 2 கோடியே 70 லட்சம் உறுப்பினர்கள் எங்களிடம் இருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த கருத்துக்கணிப்பில் கூடதி.மு.க. 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களை பெற்று சாதனை படைக்கும் என தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு இருக்கும் போது எங்களுடைய எதிரி யார்? என்பதே எங்களுக்கு தெரியவில்லை. தேர்தலை எதிர்பார்த்து தி.மு.க. தொண்டர்கள் காத்திருக்கிறார்கள். இது வரை நடந்த தேர்தல் நிகழ்வுகளை காட்டிலும் வருகிற சட்டமன்றத் தேர்தலில் அதிக இடங்களை தி.மு.க. பிடிக்கும்.

அமித்ஷாவை சந்தித்து விட்டு வந்த எடப்பாடி பழனிசாமி, முகத்தை மூடிக் கொண்டு சென்றதை அனைவரும் பார்த்திருப்பீர்கள், அண்ணா பல்கலைக்கழக வழக்கில் குற்றவாளி முகத்தை மூடிக் கொண்டு சென்றது போல் எடப்பாடி பழனிசாமியும் சென்றுள்ளார்.

அண்ணா பல்கலைக் கழக விவகாரத்தில் யார் அந்த சார்? என்று எடப்பாடி கேட்டார். இன்று அந்த காரில் உங்களுடன் சென்ற அந்த சார் யார்? என்று கேட்க வேண்டும். தற்போது, தமிழகத்தில் இருப்பது அ.தி.மு.க. கிடையாது, அமித்ஷா அ.தி.மு.க. அதை எடப்பாடி பழனி சாமியும் உறுதி செய்துவிட்டார். எடப்பாடியின் 4 ஆண்டு கால ஆட்சியை காப்பாற்றியது பா.ஜ.க. தான் என்று வெளிப்படையாக தெரிவித்துவிட்டார்.

அடுத்த கட்டமாக 2025 தேர்தலில் யார்? யாருக்கு சீட் கொடுக்க வேண்டும் என்பது கூட அமித்ஷா தான் முடிவெடுப்பார். அ.தி.மு.க.விலிருந்து நாள்தோறும் அதிருப்தியில் ஒவ்வொருவராக வெளியே வந்து கொண்டிருக்கிறார்

அப்படி வருபவர்களை சேர்ப்பதற்கே எங்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. அ.தி.மு.க.விலிருந்து யார் வெளியே வந்து தி.மு.க.வில் இணைகிறீர்களோ அவர்களுக்கு எங்களுடைய கதவு திறந்தே இருக்கும். அதனால், வருபவர்களை கண்டிப்பாக நாங்கள் வரவேற்கிறோம்.

ஜெயலலிதா இறந்த போதே 40 சதவீதம் அ.தி.மு.க. தொண்டர்கள் தி.மு.க.வுடன் இணைந்து பணியாற்ற துவங்கி விட்டார்கள். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக பேசிய அ.தி.மு.க. தொண்டர்களே அவரை தளபதி என கொண்டாட துவங்கி விட்டார்கள். அப்பா, அம்மா இல்லாத குழந்தைகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஊக்கத்தொகை கொடுத்து எப்படி அரவணைத்து வருகிறாரோ, அதுபோல தற்போது அ.தி.மு.க.வும் அப்பா, அம்மா இல்லாத குழந்தையாக மாறிவிட்டது.

அந்த குழந்தைகளையும் நமது முதல்வர் அன்போடு அரவணைத்து வருகிறார். புதிதாக வாங்கிய துடைப்பம் சற்று வேகமாக தான் பெருக்கும். அதுபோலத் தான் புதிதாக கட்சி துவங்கியுள்ள விஜய்யின் தமிழக வெற்றிக்கழகமும்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது மேயர் தினேஷ்குமார். மாநகரச் செயலாளர் தங்க ராஜ் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

## நடிகவேள் எம்.ஆர்.ராதா துணைவியார்

# கீதா ராதா மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 23-

நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களின் மனைவி கீதா ராதா அவர்கள் மறைவுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களுடைய மனைவி திருமிகு. கீதா ராதா அவர்கள் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது பிரிவால் வாடும் சகோதரி திருமதி. ராதிகா சரத்குமார் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## செம்பரம்பாக்கத்தில் இருந்து நாளொன்றுக்கு கூடுதலாக விநியோகம் செய்யப்படும்!

# 265 மில்லியன் லிட்டர் குடிநீர் மூலம் சென்னையில் 20 லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவில் பெருமிதம்!

சென்னை,செப்.23-

**செம்பரம்பாக்கத்தில் இருந்து நாளொன்றுக்கு கூடுதலாக விநியோகம் செய்யப்படும் 265 மில்லியன் லிட்டர் குடிநீர் மூலம் சென்னையில் 20 லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

அனைவருக்கும் தரமான குடிநீர் என சொன்னோம்... செய்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார். செம்பரம்பாக்கத்தில் இருந்து, சென்னை மாநகருக்கு நாளொன்றுக்குக் கூடுதலாக 265 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகத்தை, தான் தொடங்கி வைத்ததாக தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள்,

இதனால், சென்னையின் அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையார் மண்டலங்கள், தாம்பரம் மாநகராட்சியின் குன்றத்தூர் மற்றும் திருப்பெரும்புதூர் நகராட்சிகளில் உள்ள 20 இலட்சம் பொதுமக்கள் பயன்பெற உள்ளதாகவும் பதிவிட்டுள்ளார். மேலும், இது தொடர்பான வீடியோவையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பகிர்ந்துள்ளார்.

இதற்கிடையே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள மற்றொரு சமூக வலைதளப் பதிவில், சென்னை மெட்ரோ வாட்டர் தொடர்பான அனைத்துப் புகார்களையும் எளிமையாகப் பதிவு செய்ய 'சென்னை குடிநீர் செயலி' எனும் புதிய Mobile App அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். புகைப்படம் மற்றும் location ஐ இணைத்துப் புகார் தெரிவித்தால், உரிய காலத்தில் உதவிப் பொறியாளர் மூலம் தீர்வு காணப்படும் என்றும், இல்லையெனில், 48 மணி நேரத்தில் உயர் அலுவலருக்குப் புகாரளிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். திராவிட மாடல் என்பது மக்களை மையப்படுத்திய, தீர்வுகளை நோக்கிய நிர்வாகம் என்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர் பண்பாட்டை அழிக்க நினைக்கும்

# பாசிசத்தை எதிர்க்கும் ஒரே சக்தி நம் முதல்வர்தான்!

### திருச்சி பொதுக்கூட்டத்தில் பொன்.முத்துராமலிங்கம் பேச்சு!

திருச்சி, செப். 23–

திருச்சி புத்தூர் நால் ரோடு அருகே தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்க விளக்க பொதுக்கூட்டம் மாநகரச் செயலாளர் மாநகர மேயர் அன்பழகன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இங்கு இந்த கூட்டம் நடப்பதற்கான காரணம் கரூரில் நடந்த முப்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறிய தீர்மானத்தை ஆமோதித்து கோரிக்கைகளை முன்வைத்து அதை ஏற்காவிட்டால் அவருடன் உறுதுணையாக நின்று போராடவும் தயார் என உறுதி கூறுவதற்காகவே இன்று ஆயிரக்கணக்கான மக்கள் கூடியுள்ளனர்.

திருச்சி மாவட்டம் அமைச்சரான நேருவின் வழிநடத்தலுடன் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. மக்கள் அவரிடம் சென்று எந்த கோரிக்கை வேண்டுமானாலும் வைக்கலாம் அதை நிறைவேற்றி கொடுப்பவர் அமைச்சர் நேரு..

கரூரில் நடந்த முப்பெரும் விழாவில் முதல்வர் ஸ்டாலின் ஜாதி, இனம், மொழி, பிராந்தியம் என அனைத்தையும் மறந்து தமிழக மக்கள் நலனுக்கும் உரிமைக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பாசிச ஆட்சியை எதிர்த்து ஒன்றிணைவோம், போராடுவோம் என ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

நமது பண்பாடு, மண் மொழி மதம் அரசியல் என அனைத்தையும் பாதுகாக்க ஓர் அணியில் தமிழ்நாடு இயக்கம்.

இந்தி திணிப்பு கல்வி நிதி மறுப்பு கூட்டாட்சி சிதைவு தொகுதி மறு வரையறை என்ற அச்சுறுத்தல் என அனைத்து தாக்குதலையும் தமிழ்நாடு தைரியமாக எதிர்த்து நின்று போராடுகிறது.

இது தனிப்பட்ட பிராந்திய மக்கள் நலனுக்காகவோ தனிப்பட்ட நபரின் நலனுக்காகவோ அல்லது குறிப்பிட்ட இனத்திற்கு நன்மை பயக்கவோ உருவாக்கப்பட்ட கோரிக்கைகள் அல்ல. இதனால் தான் திமுக கழக தலைவர் ஸ்டாலின் அனைத்து மக்களும் ஒன்று சேர வேண்டும் என அழைத்திருக்கிறார்.

இந்திய நாட்டை பல கட்சிகள் ஆண்டு இருக்கின்றன இருந்த போதும் தி.மு.கழகம் நாட்டிற்கு பிரச்சினை என்றால் ஒரு போதும் குரல் கொடுக்க தயங்கியது இல்லை.

1975 ஆம் ஆண்டு இந்திய ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டபோது. கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை அவசர காலநிலை அமல் படுத்தப்பட்டபோது அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் கைதான போது முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஜனநாயக குரல்வளை நெரிக்கப்படும் போது அதை எதிர்க்க திராவிட முன்னேற்றக் கழகம் குரல் கொடுக்கும் என்றார். இதனாலேயே ஆட்சி கலைப்பு சந்தித்தார்.

சீனா இந்திய எல்லையை ஆக்கிரமித்த போது தி.மு.க. நாட்டிற்கு ஆதரவாக ஒன்றிய அரசுக்கு ஆதரவாக குரல் கொடுத்தது அறிஞர் அண்ணா இது ஒன்றிய அரசின் பிரச்சினை அல்ல நாட்டிற்கான பிரச்சினை என கூறி ஒன்றிய அரசுக்கு ஆதரவு தெரிவித்தார். அதே வேளையில் நியாயமற்ற முடிவுகளை, தமிழக மக்களின் உரிமையை பறிக்கும் முடிவுகளை ஒன்றிய அரசு எடுத்தால் அதை எதிர்க்கவும் தி.மு.க. என்றும் தயங்கியது இல்லை. அதற்கான அறை கூவல் தான் இந்த ஓரணியில் தமிழ்நாடு இயக்கம்.

இதற்கு முன் ஒன்றியத்தில் காங்கிரஸ் ஜனதா கட்சி பாரதிய ஜனதா ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தது ஆனால் தற்போது நடக்கும் மோடி ஆட்சி போல் பாசிச ஆட்சி என்றும் நடந்தது இல்லை.

ஒரே இனம் ஒரே மொழி என சில கொள்கைகளை திணித்து இந்திய நாட்டின் பன்முக தன்மையை சிதைக்கும் தற்போதைய பாசிச ஆட்சியை எதிர்க்கும் விதமாக தொலைநோக்கு சிந்தனையோடு திமுக தலைவர் ஸ்டாலின் ஓர் அணியில் திரள்வோம் என அனைத்து மக்களுக்கும் கோரிக்கை வைத்துள்ளார்.

இந்தியா ஒரு துணை கண்டம், இதைத்தான் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் 1962 ஆம் ஆண்டு கூறினார் ஜனநாயகம் உருக்குலைக்கப்பட்டு இருக்கிறது சமரசம் சிதைக்கப்பட்டு இருக்கிறது தேசியம் தவறாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளது எனக் கூறினார்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை உள்ள மக்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்து அவர்களை வெளியேற வைக்க குரல் கொடுத்தார்கள். அவர்கள் ஒன்றிணைந்து போராடிய காரணத்தினால் இந்தியா விடுதலை பெற்றது.

உணர்வால் ஒன்றுபட்டாமே தவிர இந்தியா ஒரு நாடு என கூற எந்த வரலாறும் இல்லை. இதை அறிந்ததால் முதல்வர் ஸ்டாலின் ஆட்சிக்கு வந்தது முதல் மத்திய அரசு என கூறாமல் ஒன்றிய அரசு எனக் கூறி வருகிறார்.

இது ஜனநாயக குடியரசு மற்றும் அல்ல ஜாதி மத இன மதச்சார்பற்ற அரசாக இருக்க வேண்டும் என டாக்டர் அம்பேத்கர் நமக்கு வகுத்துக் கொடுத்துள்ளார்.

இதை நாட்டை ஆளும் பிரதமர்கள் கையாளுவார்கள் ஆனால் இந்திய நாட்டின் ஒற்றுமை தொடரும் இதுவே மாநில உரிமைகளையும் அதிகாரத்தையும் பறித்தால். நாட்டில் அமைதி தொடராது.

கல்வி மாநில பட்டியலில் உள்ளது அதை ஒப்புகை பட்டியல் என அழைப்பார்கள் மாநில அரசு எந்த முடிவை வேண்டுமானாலும் எடுக்கலாம் ஆனால் அதற்கு ஒன்றிய அரசு அனுமதி அளிக்க வேண்டும். அதனால்தான் நீட் தேர்வு கொண்டு வந்த போது அதை நம்மால் ரத்து செய்ய முடியவில்லை. இதுபோன்று செய்து அதிகார குவியலை கொண்டு ஒரு அரசை உருவாக்க தற்போதைய ஒன்றிய அரசு முடிவு எடுத்துள்ளது.

அதனால் தான் படித்த அனைவர்களும் இந்த தமிழ் மண்ணின் மீதும் மக்கள் மீதும் பற்று கொண்ட அனைவரும் ஒன்று கூட வேண்டும் முதல்வர் ஸ்டாலின் அனைவரையும் அழைத்துள்ளார்.

பா.ஜ.க. ஆட்சியில் தொடர்ந்தால் மாநில அரசுகள் பெரும் சவால்களை சந்திக்க நேரிடும்.

தமிழர் நாகரீகம் 5000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இரும்பை பயன்படுத்திய பெருமை நம் தமிழர்களுக்கு உள்ளது. கீழடி அகழ்வாராய்ச்சி அதற்கு சான்று. அதை அழிக்க பார்க்கிறது பா.ஜ.க. அரசு.

நம் தமிழர் பண்பாட்டையும் நாகரீகத்தையும் அழிக்க பார்க்கும் சக்திகளை எதிர்க்க ஒரே சக்தி நமது முதல்வர் மு.க. ஸ்டாலின் மகத்தான தலைமை கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டில் 90% மக்கள் கல்வி பெற்றுள்ளனர். சுயமரியாதை மாநாடு வாயிலாக ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண் என சட்டம் கொண்டு வந்தது தி.மு.க.

தி.மு.க. கொண்டு வந்த திட்டம் அனைத்தும் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்று சேர்ந்துள்ளது குறிப்பாக மகளிருக்கு.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டசபையில் அமர்ந்துள்ள முதல்வர் நிறைவேற்றிய திட்டத்தை சம்பிரதாயத்திற்காக உள்ள ஆளுநர் நிலுவையில் வைத்திருந்தார். இதை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்று வென்றது தி.மு.க..

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் முதல்வர்கள் அவர்கள் சொல்வதை செய்வார்கள் பா.ஜ.க. ஆட்சி நடக்காத மாநிலங்களில் இது போன்ற ஆளுநர்களை வைத்து தகராறு செய்கின்றனர்.

குடியரசுத் தலைவர் இந்திய சட்ட பிரச்சினையில் விளக்கம் கேட்கலாம் என ஒரு சட்டம் உள்ளது அதனால் குடியரசுத் தலைவர் இது குறித்து கேட்டார். உச்சநீதி மன்ற நீதிபதிகளோ ஆளுநர் விவகாரத்தில் தீர்ப்பு இறுதியானது என தெரிவித்தனர்.

வருமானவரித்துறை அமலாக்கப் பிரிவு போன்ற அனைத்தையும் ஏவி விட்டு பயமுறுத்து பார்க்கிறது ஒன்றிய அரசு ஆனால் அதற்கெல்லாம் அஞ்சாதவர் நம் முதல்வர்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த கூட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர்கள் வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி,சௌந்தர பாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம், பொருளாளர் துரைராஜ், மாமன்ற உறுப்பினர் நாகராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம், நகர பகுதியில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. தலைமையில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தேர்தல் பணிக்குழு செயலாளர், தலைமைக் கழக பேச்சாளர் கடலூர் இள.புகழேந்தி 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தின் நோக்கத்தை விளக்கி சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் தடங்கம்.பெ.சுப்ரமணி, பி.என்.பி.இன்பசேகரன், தருமச்செல்வன், நகர செயலாளர் நாட்டான்.மாது, தொகுதி பார்வையாளர்கள் செங்குட்டுவன், பாரி உள்ளிட்ட தி.மு.க.வினர் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்று கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஒன்றியத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் பங்கேற்று பேசினார். துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., மாவட்டப் பொறுப்பாளர் ராஜா, டி.பீமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.